**திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (மானியம்) - 2020**

திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (மானியம்) 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 மே 11 ஆந் திகதிய 9193 எஸ்ஆர்ஜ (ஈஎவ்) ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 4.02(அ) பிரிவின் IV ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சாகவிருந்த தற்போதைய கல்வி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் பத்து அமுல்படுத்தல் முகவர்கள் காணப்படுகின்றனர். (அ) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி பயிற்சி துறையில் ஈடுபட்டுள்ள தனியார் துறையை வலுப்படுத்துதல், (ஆ) பெண்களை முன்னிறுத்தி சுயதொழில் தொழில்முனைவோர் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை முன்னேற்றுதல், (இ) பாரம்பரியமற்ற பகுதிகளிற்கு பெண்களை கவர்வதற்கு இலக்கிடப்பட்ட ஊக்குவிப்புக்கள், வழிகாட்டல் மற்றும் வேலைப்பயிற்சி வழங்கல் மற்றும் (ஈ) தனியார் துறையில் பாலினம் உள்ளடங்கிய ஆட்சேர்ப்பு மற்றும் வேலைச் சுற்றாடல் நடைமுறைகளை உறுதிப்படுத்துதல் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாகும். மானிய உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 534 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 3 மில்லியனாகக் காணப்பட்டதுடன் வறுமை குறைப்பிற்கான ஜப்பான் நிதியத்தால் (ஜேஎவ்பிஆர்) மானியமொன்றாக நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டதுடன் செயற்திட்ட நிதியிடல் நோக்கங்களிற்காக ஏடிபீ ஆல் இது நிர்வகிக்கப்படுகின்றது. நிகழ்ச்சித்திட்டம் அதன் செயற்பாடுகளை 2018 நவம்பர் 16 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 மார்ச் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, நிகழ்ச்சித்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின்

காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயங்கள் | தொகை ரூபா | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 4.1 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட நிதிக் கொள்கையின் பிரகாரம் நிதிக்கூற்று அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்படுகின்ற போதிலும் மீளாய்வாண்டிற்கான செலுத்த வேண்டிய ரூபா 717,500 தொகை நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | 717,500 | காலப்பகுதிக்கான செலவினங்களை சேர்ப்பதற்காக 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 717,500 இற்கான விலைச்சிட்டைகள் பெறப்பட்டிருக்கவில்லை என Oxfarm அறிவித்திருந்தது. | தவறு சீர்செய்யப்பட வேண்டும். |

### 2.2 மீளப்பெறல் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதில் தாமதங்கள்

| இல. | மீளப்பெறல் விண்ணப்ப இல. | காலப்பகுதி | சமர்ப்பித்தல் திகதி | தாமதமான காலப்பகுதி | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | 01 | 2018 திசெம்பர் – 2019 மார்ச் | 2019 ஆகஸ்ட் 02 | 124 நாட்கள் | குறித்துக் கொள்ளப்பட்டது. உரிய நேரத்தில் அதனை சமர்ப்பிப்பதற்கு அமுல்ப்படுத்தல் முகவரிற்கு கோரிக்கை மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் குறித்த காலப்பகுதியின் போது நிலவிய தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் உரிய நேர பணவளிப்பை மோசமாக | முகாமைத்துவம் உரிய நேரத்தில் மீளப்பெறல் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 02 | 2019 ஏப்ரல் - 2019 யூலை | 2019 திசெம்பர் 24 | 146 நாட்கள் | | |
| (இ) | 03 | 2019 ஆகஸ்ட் - 2019 திசெம்பர் | 2019 மார்ச் 02 | 69 நாட்கள் | | |
| (ஈ) | 04 | 2020 சனவரி – 2020 ஏப்ரல் | 2020 ஒக்தோபர் 05 | 158 நாட்கள் | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (உ) | 05 | 2020 மார்ச் - 2020 யூலை | 2021 பெப்ரவரி 22 | 200 நாட்கள் | பாதித்திருந்தன. |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டின் போது 6524 பயிற்சியாளர்களின் பங்குபற்றலுடன் 226 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது 309 பங்குபற்றுநர்களின் பங்குபற்றலுடன் 11 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. எனினும் அதில் 5 நபர்கள் பயிற்சியிலிருந்து விலகியிருந்தனர். | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் வேறுபடுகின்றதுடன் நேரடியான ஒப்பீட்டை மேற்கொள்ள முடியாது. 2020 ஆம் ஆண்டில் இது தொழில்முனைவோர் அபிவிருத்தி பயிற்சி மாத்திரமாகும். அத்துடன் 2020 ஆம் ஆண்டிற்காக அனைத்து நிறுவனங்களாலும் நடாத்தப்படும் தெரிவுசெய்யப்பட்ட 266 நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் முழு மாணவர் சனத்தொகையும் கருத்தில் கொள்ளப்பட்டது. | நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியினுள் நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு பயிற்சிகளை திட்டமிட்டு அமுல்ப்படுத்துவதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2019 ஏப்ரல் 9 ஆம் திகதிய நிகழ்ச்சித்திட்டத்தின் தொடக்க அறிக்கையின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பத்தில் மேல், வட, வடமேல், ஊவா மற்றும் சப்ரகமுவ ஆகிய 5 மாகாணங்களில் அமுல்ப்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆண்டின் போது வடமேல் மற்றும் வட மாகாணங்களில் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. | 2020 யூன் தொடக்கம் யூலை வரையான காலப்பகுதியின் போது மேல் மாகாணத்தில் வறுமை நிலை கணக்கெடுப்பு (poverty pocket survey) நடாத்தப்பட்டது. (கொவிட் முடக்க காலப்பகுதி). அத்துடன் 2020 நவம்பர் 20 இல் மேல் மாகாண வறுமை நிலைகளிற்காக (poverty pockets) எஸ்எஸ்டிபி அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. எனவே 2021 இன் முதலாவது நுழைவிலிருந்து மேல் மாகாண நடவடிக்கைகளை நாங்கள் ஆரம்பித்திருந்தோம்.<br><br>ஊவா மற்றும் சப்ரகமுவ ஒருங்கிணைப்பாளர் 2020 யூன் மாதத்தில் பதவி விலகியிருந்ததுடன் புதிய ஆட்சேர்ப்பு 2020 ஒக்தோபரில் மேற்கொள்ளப்பட்டது. அவர் | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இணைந்தவுடனேயே கொவிட் இரண்டாம் அலை ஆரம்பித்திருந்ததுடன் கள பயிற்சிகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. பதவிநிலை வெற்றிடமான காலப்பகுதியின் போது செயற்திட்டம் அவ் இரண்டு மாகாணங்களிலும் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்தியிருக்கவில்லை. அத்துடன் இக் காலப்பகுதியின் போது தேசிய மட்ட நிகழ்ச்சித்திட்ட பதவியணியினரும் காணப்படவில்லை. | |
| (இ) | நிகழ்ச்சித்திட்டத்தின் விபரமான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2018-2020 ஆண்டுகளிற்காக இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 24 பிரதான இலக்கிடப்பட்ட வேலைகளின் கீழ் 110 உப இலக்கிடப்பட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 17 பிரதான இலக்குகளின் கீழ் 48 உப இலக்குகள் எதிர்பார்க்கப்பட்டவாறு அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவிய பின்வரும் தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் நிகழ்ச்சித்திட்ட அமுல்ப்படுத்தலை மோசமாக பாதித்திருந்தன.<br><br>செயற்திட்ட நடவடிக்கை திட்டம் 2019 யூன் மாதத்தில் இறுதியாக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.<br><br>2019 ஏப்ரல் 21 இல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றிருந்தது.<br><br>2020 மார்ச் மாதத்தில் கொவிட் தொற்றுநோய் ஆரம்பித்திருந்தது.<br><br>பதவியணியினர் புரள்வு<br><br>நிகழ்ச்சித்திட்ட பதவியணியினர் ஆட்சேர்ப்பு சிக்கல்கள்<br><br>கொவிட் இரண்டாவது அலை 2020 ஒக்தோபரில் ஆரம்பித்திருந்ததுடன் இது 2020 திசெம்பர் வரை சென்றது. | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட அமுல்ப்படுத்தல் ஆவணத்தின் 20 ஆம் பந்தியின் பிரகாரம் அமுல்ப்படுத்தல் முகவர் மானிய நிதிகளை பெற்றுக்கொள்வதற்கு தனியான வங்கிக் கணக்கொன்றை திறந்து வங்கி கணக்கு கூற்றையும் மானிய பெறுகைகளை பயன்படுத்தி நிதிக் கொடுக்கல் வாங்கல்களை கணக்கீடு செய்யும் விபரங்களையும் பேண வேண்டியதுடன் நிகழ்ச்சித்திட்ட அலுவலகத்திற்கு மாதாந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றை சமர்ப்பிக்குமாறு 2019 மே 13 இல் நடைபெற்ற நிதிக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. எனினும் 2018 நவம்பர் 16 இலிருந்து செயற்திட்டம் செயற்படுகின்றது. மதியுரை நிறுவனம் 2020 ஒக்தோபரில் தனியான வங்கிக் கணக்கொன்றை திறந்திருந்ததுடன் செயற்திட்டத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களை தயாரித்திருந்தது. மேலும் அவ் வங்கிக் கணக்கிலிருந்து மதியுரை நிறுவனத்தின் செலவினத்திற்காக ரூபா 140,671 தொகை செலவிடப்பட்டிருந்தமை குறித்துக் கொள்ளப்பட்டது. | Plan International 2020 பெப்ரவரி தொடக்கம் தனியான வங்கிக் கணக்கொன்றை பயன்படுத்த ஆரம்பித்திருந்தது. Plan International இலங்கையில் நடவடிக்கைகளை மூடியிருந்ததால் வங்கிக் கணக்கிணக்க அறிக்கையை பெற்றுக்கொள்வது சாத்தியமற்றதாக உள்ளது. வங்கிக் கணக்கு விபரங்கள் பின்வருமாறு உள்ளன.<br><br>கணக்கின் பெயர் - FOSTER PARENTS PLAN INTERNATIONAL<br>கணக்கு இலக்கம் - 01369286802எல்கேஆர்<br>வங்கியின் பெயர் - ஸ்ரான்டட் சாட்டட் வங்கி<br><br>Oxfam 2020 ஒக்தோபரிலிருந்து இச் செயற்திட்டத்திற்காக தனியான வங்கிக் கணக்கொன்றை பயன்படுத்துகின்றது. அனைத்து செயற்திட்டம் தொடர்புபட்ட கிரயங்கள் மற்றும் நிர்வாக கிரயம் என்பன இவ் வங்கிக் கணக்கின் ஊடாக செலுத்தப்படுகின்றன. ரூபா 140,671 தொகை இச் செயற்திட்டத்துடன் தொடர்புபட்ட நிர்வாக கிரயமாகும். | நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக் கொடுக்கல் வாங்கல்களிற்காக தனியான வங்கிக் கணக்கு திறக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட முன்மொழிவு ஆவணங்களின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியின் போது காலாண்டு செயன்முன்னேற்ற அறிக்கைகள் ஒவ்வொரு காலாண்டும் தயாரிக்கப்பட வேண்டும். ஆனால் இந்த 3-ஆண்டு | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிகழ்ச்சித்திட்ட தேவைப்பாட்டின் பிரகாரம் காலாண்டு செயன்முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செயற்திட்டத்திற்கான செயன்முன்னேற்ற அறிக்கைகள் பட்டியலிட்டவாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) செயற்திட்ட செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ஐக்கிய அமெரிக்க டொலர் 860,059 தொகையான பாதீட்டு மானியம் மீளாய்வாண்டின் இறுதியில் 11 செயற்பாடற்ற கூறுகளிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | குறித்துக் கொள்ளப்பட்டது. | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (ஈ) நிகழ்ச்சித்திட்ட செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 23 கூறுகளிற்காக பாதிடப்பட்ட ஒதுக்கீடு ஐக்கிய அமெரிக்க டொலர் 2,253,620 தொகையானதுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் ஐக்கிய அமெரிக்க டொலர் 74,542 தொகை மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவிய பின்வரும் தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் நிகழ்ச்சித்திட்ட அமுல்ப்படுத்தலை மோசமாக பாதித்திருந்தன.<br><br>செயற்திட்ட நடவடிக்கை திட்டம் 2019 யூன் மாதத்தில் இறுதியாக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.<br><br>2019 ஏப்ரல் 21 இல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றிருந்தது.<br><br>2020 மார்ச் மாதத்தில் கொவிட் தொற்றுநோய் ஆரம்பித்திருந்தது.<br><br>பதவியணியினர் புரள்வு<br><br>நிகழ்ச்சித்திட்ட பதவியணியினர் ஆட்சேர்ப்பு சிக்கல்கள்<br><br>கொவிட் இரண்டாவது அலை 2020 ஒக்தோபரில் ஆரம்பித்திருந்ததுடன் இது 2020 திசெம்பர் வரை சென்றது. | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

### 3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்கீட்டு குறைபாடுகள்/ கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| Plan international நிறுவனம் தொழில்துறை திறன்கள் பிரிவில் தந்திரோபாய அபிவிருத்தி மற்றும் | போட்டிக் கேள்வி பெறுகை செயன்முறையை பின்பற்றிய பின்னர் நேர்முகத்தேர்வு செயன்முறை மற்றும் | பெறுகை வழிகாட்டல்களை பின்பற்றுவதற்கு தேவையான |

வசதிப்படுத்தலிற்காக செயற்பாட்டுத் திட்டத்தை தயாரிக்கும் மதிப்பீட்டிற்காக கேள்விகளை கோரியிருந்தது. இதற்காக தெரிவுசெய்யப்பட்ட தொழில்துறை சேவை பணியகம் ரூபா 3,079,125 ஆன 4 ஆவது குறைந்த கேள்வியை வழங்கியிருந்தது. குறைந்த கேள்வி நிறுவனத்திற்கும் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனத்திற்கும் இடையே ரூபா 967,125 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. தொழில்துறை சேவைகள் பணியகத்தின் தெரிவானது பிரதானமாக தொழில்நுட்ப இயலளவு, மதியுரையாளர் சுயவிபரம் மற்றும் பாதீட்டை அடிப்படையாக கொண்டு காணப்பட்டதென குறிப்பிடப்பட்ட போதிலும் குறிப்பு விதிமுறைகளின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் ஆலோசகர்களால் வைத்திருக்கப்பட வேண்டிய பட்டப்பின் படிப்பு மற்றும் ஏனைய தகைமைகள் தொடர்பான உரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

தொழில்நுட்ப குழு மதிப்பீடு என்பவற்றின் ஊடாக ஐஎஸ்பீ தெரிவுசெய்யப்பட்டிருந்தது. தொடர்புடைய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.